# உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம்

## பாடல் 11 முதல் 20 வரை

இந்நூலில் உள்ள பாடல்கள் முதலில் சுவாமிகள் இயற்றியவாறும் பின்பு சித்தாந்த செல்வர், அருநூற்புலமை ஆன்றோர் பேராசிரியர் டாக்டர் ப. இராமன், அவர்களின் வழிகாட்டுதல் பெயரில் இப் பாடல் என்னைப் போல் எளியவர் படிப்பதற்கு ஏற்றவாறு பிரித்தும் அந்த பாடல்களுக்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாற பிரித்து கொடுப்பது எளிய முறையில் கற்றுக் கொள்ளுவதற்கு மட்டும் தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

**ஆதித்தர் கடவுளா யவிர்பொருளை யாலம்ப**
**மற்றுண்மை யுற்றபொருளை**
**அபிதான வபிதேய நீத்தவொரு பொருளையெனை**
**யன்பாய் வளர்த்தபொருளை**
**நாதத்தி னந்தமா யுளபொருளை யிதயத்தி**
**னடுவே யமர்ந்தபொருளை**
**ஞானவா னாநிறைந் தெங்குமுள பொருளையென்**
**னட்புக் குகந்தபொருளை**
**வாதத்தி னாலளவி டற்கரிய பொருளையென்**
**மனுவிற் கிரங்குபொருளை**
**வழியடிய வர்க்கண்மை நொதுமலர்க் கதிதூர**
**மாகநின் றுள்ளபொருளைச்**
**சீதத் திருப்பரிவி னல்கியெனை யாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே.** 11.

*ஆதித்தர் கடவுளாய் அவிர்பொருளை ஆலம்பம்*
*அற்று உண்மை உற்ற பொருளை*
*அபிதான அபிதேயம் நீத்த ஒரு பொருளை எனை*
*அன்பாய் வளர்த்த பொருளை*
*நாதத்தின் அந்தமாய் உள பொருளை இதயத்தின்*
*நடுவே அமர்ந்த பொருளை*
*ஞானவானா நிறைந்து எங்கும் உள பொருளை என்*
*நட்புக்கு உகந்த பொருளை*
*வாதத்தினால் அளவிடற்கு அரிய பொருளை என்*

*மனுவிற்கு இரங்கு பொருளை*
*வழி அடியவர்க்கு அண்மை நொதுமலர்க்கு அதிதூர*
*மாக நின்றுள்ள பொருளைச்*
*சீதத் திருப்பரிவு நல்கி எனை ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே.* *11.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயமென்னும் அறிவிருக்கும் தளத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! ஆதித்தன் எனப்படும் சூரியனின் கடவுளாக விளங்கு பொருளை, ஆதாரமற்று மெய்ப்பொருளாய் உள்ள பொருளை, பெயரும், பெயரிடுதற்குரிய தன்மையும் இல்லாத பொருளை, என்னை அன்பாக வளர்த்த பொருளை, நாதத்தின் முடிவில் உள்ள பொருளை ஆன்மாக்களின் இதயத்தின் நடுவில் அமர்ந்த பொருளை, ஞான ஆகாசமாய் நிறைந்து எங்கும் உள்ள பொருளை, என் நட்புக்குத் தகுந்த பொருளை, தருக்கத்தினால் இன்ன தன்மையது என்று அளவிட்டுக் கூற முடியாத பொருளை என் விண்ணப்பத்திற்குத் திருவுளம் இரங்கும் பொருளை, வழிவழி அடிமையர்க்கு நெருக்கமாகவும், பொதுவானவர்க்குத் தூரமாகவும் இருக்கும் பொருளைக் குளிர்ந்த மேலான அன்பினால் அளித்து அடிமை கொண்டருள்வாயாக!

**சகலபுத் தேள்களு மிறைஞ்சிப் பழிச்சுஞ்**
**சதானந்த நாயகத்தைச்**
**சருவபரி பூரன வனாரத சிதாகாச**
**சபைநடன நாயகத்தைச்**
**சகமாயை மருவாத மௌனமெய்ஞ் ஞானிகளி**
**தயமேவு நாயகத்தைச்**
**சந்தேகர் நெஞ்சினில் லாதசிவ ஞானோ**
**தயப்பிரம நாயகத்தைச்**
**அகரவுயி ரைப்போல விகபர மிரண்டிலு**
**மளாவியவிர் நாயகத்தை**
**அறிவதற் கெண்ணினே னறிவுதந் தறிவித்**
**தருட்பரவை யிடையமிழ்த்தித்**
**திகழுநின் சேவடியில் வதியவைத் தாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே.** **12.**

*சகல புத்தேள்களும் இறைஞ்சிப் பழிச்சும்*
*சதானந்த நாயகத்தைச்*

*சருவபரி பூரண அனாரத சிதாகாச*
*சபை நடன நாயகத்தைச்*
*சக மாயை மருவாத மௌன மெய்ஞ்ஞானிகள்*
*இதய மேவு நாயகத்தைச்*
*சந்தேகர் நெஞ்சில் நில்லாத சிவ ஞானோ*
*தயப்பிரம நாயகத்தை*
*அகர உயிரைப் போல இகபரம் இரண்டிலும்*
*அளாவி அவிர் நாயகத்தை*
*அறிவதற்கு எண்ணினேன் அறிவு தந்து அறிவித்து*
*அருட்பரவை இடை அமிழ்த்தித்*
*திகழு நின் சேவடியில் வதிய வைத்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 12.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயமென்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! சகல தேவர்களும் வணங்கித் துதிக்கும் சதானந்த நாயகத்தை, எங்கும் நிறைந்த சிதாகாச சிற்சபையில் அனவரத தாண்டவமாடும் நாயகத்தை, உலகமாயை பற்றாத மௌன மெய்ஞ்ஞானிகளின் இதயத்தில் எழுந்தருளும் நாயகத்தை, சந்தேகப்படுவோர் மனத்தில் நில்லாதசிவஞானத் தோற்றமுடைய பிரம நாயகத்தை, அகர உயிரைப்போல இம்மை மறுமை இரண்டிலும் கலந்து விளங்கும் நாயகத்தை அறிவதற்கு நினைத்தேன்; அந்த அறிவு தந்து அறிவித்து, அருட்கடலில் அமிழ்த்தி விளங்கும் நின் திருவடியில் வாழ வைத்து அடிமை கொண்டருள்வாயாக!

**அடியுநடு முடியுமற் றறிவரிய பெரிதா**
**யலங்கும் பராபரத்தை**
**அருவுமற் றுருவுமற் றருவுருவு மற்றெவையு**
**மறியும் பராபரத்தை**
**மிடியுமருண் மடியுமற் றதுவிது வெனார்கண்**
**விளங்கும் பராபரத்தை**
**மிறைகுறைக ளின்றிச் சிதாகாச மௌனமின்னி**
**விரியும் பராபரத்தைக்**
**குடியுமரில் வெருவுமற் றெனைநசைஇ யென்னுட்**
**குதிக்கும் பராபரத்தைக்**
**கொடியனே னுணராது குவலய மயக்கினனி**
**குலைகிறேன் குலையாமலே**
**திடவருளி னின்றுணர வருள்புரிந் தாளரோ**

**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 13.**

*அடியும் நடுமுடியும் அற்று அறிவரிய பெரிதாய்*
*அலங்கும் பராபரத்தை*
*அருவும் அற்று உருவும் அற்று அருவுருவும் அற்று எவையும்*
*அறியும் பராபரத்தை*
*மிடியும் அருள் மடியும் அற்று அது இது எனார்கண்*
*விளங்கும் பராபரத்தை*
*மிறைகுறைகள் இன்றிச் சிதாகாசம் என மின்னி*
*விரியும் பராபரத்தைக்*
*குடியும் அரில் வெருவும் அற்று எனை நசை இ என்னுள்*
*குதிக்கும் பராபரத்தைக்*
*கொடியனேன் உணராது குவலய மயக்கில் நனி*
*குலைகிறேன் குலையாமலே*
*திட அருளில் நின்று உணர அருள்புரிந்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 13.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயமென்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! முதலும் இடைகடையும் இல்லாமல் அறிவதற்கு அரிய பெரிதாய் விளங்கும் பராபரத்தை, அருவம் உருவம் அருவுருவம் ஆகிய எவையும் இல்லாமல் எல்லாவற்றையும் அறியும் பராபரத்தை, வறுமை, மயக்கம், சோம்பல் ஆகியவை அற்றுப் பேத உணர்வில்லாரிடத்து விளங்கும் பராபரத்தை, குலமும் குற்றமும் அச்சமும் அற்று எனை விரும்பி என்னுள் எழுந்தருளும் பராபரத்தை, கொடியவனாகிய நான் அறியாது உலக மயக்கத்தில் மிகவும் தளர்கின்றேன்; தளராமல் உறுதியான உன் திருவருளில் நிலைபெற்று அறிய அருள்புரிந்து என்னை அடிமை கொண்டருள்வாயாக!

**ஓங்கார சத்தத்தி னாதவடி வாகியுள்**
**ளூமையா நிற்குமொன்றை**
**ஊமையெனு மாமோன முடிவான பொருளா**
**யுறங்கா திருக்குமொன்றை**
**ஆங்கார நோயினை யறுத்தபெரி யோரறிவி**
**லனுதினம் விளங்குமொன்றை**
**ஆபாச மிறையுமில் லாதபர வெளிமுழு**

**அளாவிநிறை வானவொன்றைத்**
**தூங்காத பக்குவர்க் கருள்செய்ய விறைவடிவு**
**தூய்மையிற் கொள்ளுமொன்றைத்**
**துகளற்ற திவ்வியதே சோமயா னந்தவொளி**
**சுடர்பருதி யாயவொன்றைத்**
**தீங்கேறி யுழலெனக் கினிதுதவி யாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 14.**

*ஓங்கார சத்தத்தில் நாதவடிவாகி உள்*
*ஊமையா நிற்கும் ஒன்றை*
*ஊமை எனும் மாமோன முடிவான பொருளாய்*
*உறங்காது இருக்கும் ஒன்றை*
*ஆங்கார நோயினை அறுத்த பெரியோர் அறிவில்*
*அனுதினம் விளங்கும் ஒன்றை*
*ஆபாசம் இறையும் இல்லாத பர வெளி முழுது*
*அளாவி நிறைவான ஒன்றைத்*
*தூங்காத பக்குவர்க்கு அருள் செய்ய இறை வடிவு*
*தூய்மையில் கொள்ளும் ஒன்றைத்*
*துகள் அற்ற திவ்விய தேசோமய ஆனந்த ஒளி*
*சுடர் பருதியாய ஒன்றைத்*
*தீங்கு ஏறி உழல் எனக்கு இனிது உதவி ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தேள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 14.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயமென்னும் அறிவிருக்கும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! ஓங்கார ஒலியில் நாத வடிவாகி, அதனுள்ளே ஊமையாக இருக்கும் ஒன்றை, ஊமை என்னும் பெரிய மௌன முடிவாக உள்ள பொருளாய் உறங்காதிருக்கும் ஒன்றை, அகங்காரம் ஆகிய நோயை ஒழித்த பெரியோர் தம் அறிவில் அனுதினம் விளங்கும் ஒன்றை, ஆபாசம் சிறிதுமில்லாத பரவெளியில் முழுவதும் பரவி நிறைவான ஒன்றை, தூக்கமில்லாத பக்குவர்க்கு அருள் புரிதர்பொருட்டுக் கடவுள் வடிவைத் தூய நிலையில் கொள்ளும் ஒன்றை, குற்றமற்ற தெய்வத் தன்மையுள்ள ஒளிமயமான ஆனந்த ஒளி வீசும் ஞாயிறான ஒன்றை, தீமை மிகுந்து திரியும் எனக்கு நன்கு உதவி அடிமை கொண்டருள்வாயாக.

**அவலநுவ லபலமுஞ் சபலமுஞ் சலனமு**

**மசஞ்சலமு மில்லாததை**
**ஆசையு நிராசையு மடந்தரு மிடம்பமு**
**மழுக்காறு மில்லாததைத்**
**துவிதவுரை யேகவுரை கூறுபவர் வாதமுஞ்**
**சூனியமு மில்லாததைச்**
**சுத்தமு மசுத்தமுந் துக்கமு மகிழ்ச்சியுஞ்**
**சுட்டுணர்வு மில்லாததை**
**அவனெனலு மவளெனலு மவரெனலு மதுவெனலு**
**மவையெனலு மில்லாததை**
**அறியாத சிறியே னறிந்துய்ய நின்னையே**
**யண்டினே னகிலமெனையுஞ்**
**சிவமா முனக்குரிய தொண்டனென வாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 15.**

*அவல நுவல் அபலமும் சபலமும் சலனமும்*
*அசஞ்சலமும் இல்லாததை*
*ஆசையும் நிராசையு மடம் தரும் இடம்பமும்*
*அழுக்காறும் இல்லாததைத்*
*துவித உரை ஏக உரை கூறுபவர் வாதமும்*
*சூனியமும் இல்லாததைச்*
*சுத்தமும் அசுத்தமும் துக்கமும் மகிழ்ச்சியும்*
*சுட்டுஉணர்வும் இல்லாததை*
*அவன் எனலும் அவள் எனலும் அவர் எனலும் அது எனலும்*
*அவை எனலும் இல்லாததை*
*அறியாத சிறியேன் அறிந்து உய்ய நின்னையே*
*அண்டினேன் அகிலம் எனையும்*
*சிவமாம் உனக்கு உரிய தொண்டன் என ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 15.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! துன்பம் கூறும் பயனின்மையும் பயனும், அசைவும் அசையா நிலையும் இல்லாததை, ஆசையும், ஆசையின்மையும் அறியாமை தரும், ஆடம்பரமும் பொறாமையும் இல்லாததை, இரண்டு எனக் கூறுபவர் ஒன்றைக் கூறுபவர் வாதமும் சூனியமும் இல்லாததை, சுத்தம், அசுத்தம், துன்பம், மகிழ்ச்சி, சுட்டி அறிதல் ஆகிய ஒன்றும்

இல்லாததை, அறியாத சிறியேன் அறிந்து பிழைக்க நின்னையே அண்டினேன்; உலகம் முழுதும் உள்ள உனக்கு உரிமையுள்ள தொண்டன் என ஏற்று அடிமை கொண்டருள்வாயாக!

**பொய்யாத தாரகப் பொருளா யிருந்தருள்**
**புரிந்திடு சதாசிவத்தைப்**
**போதத்தி னிடைநின் றுணர்ச்சிதரு கின்றபரி**
**பூரண சதாசிவத்தை**
**மெய்யான வானந்த நிர்த்தன விருஞ்சபை**
**விளங்கொரு சதாசிவத்தை**
**வித்தவெளி யென்னவிட னற்றுநிலை யுற்றெங்கு**
**மேவிய சதாசிவத்தை**
**நையா வகண்டபதி ஞானச் சுயஞ்சோதி**
**நடுவவிர் சதாசிவத்தை**
**நாடா தளப்பிலக நாடமதி கெட்டகடை**
**நாயனே னின்னுமதனைச்**
**செய்யாது னிருபதந் தொழவேவி யாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 16.**

*பொய்யாத தாரகப் பொருளாய் இருந்து அருள்*
*புரிந்திடு சதாசிவத்தைப்*
*போதத்தின் இடை நின்று உணர்ச்சி தருகின்ற பரி*
*பூரண சதாசிவத்தை*
*மெய்யான ஆனந்த நிர்த்தன இருஞ்சபை*
*விளங்கு ஒரு சதாசிவத்தை*
*வித்த வெளி என்ன விடன் அற்று நிலையுற்று எங்கும்*
*மேவிய சதாசிவத்தை*
*நையா அகண்ட பதி ஞானச் சுயஞ் சோதி*
*நடுஅவிர் சதாசிவத்தை*
*நாடாது அளப்பில் அக நாடி மதி கேட்ட கடை*
*நாயனேன் இன்னும் அதனைச்*
*செய்யாது உன் இரு பதம் தொழ ஏவி ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 16.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! என்றும் அழிவில்லாத தாரகம் எனும் பிரணவப் பொருளாக இருந்து அருள் புரிந்திடும் சதாசிவத்தை, அறிவுடை நின்று அறிவைத் தருகின்ற பரிபூரண சதாசிவத்தை, அழிவற்ற ஆனந்த நடனப் பெருஞ்சபை விளங்குமொரு சதாசிவத்தை, ஞானவெளி என்ன இடமின்றி எங்கும் நிலைபெற்றுள்ள சதாசிவத்தை, அழியாத அகண்ட பதிஞானச் சுயஞ் சோதி நடுவில் விளங்கும் சதாசிவத்தை அடையாமல், அளவில்லாப் பாவங்களைச் செய்து, அறிவு கெட்டுக் கடைநாயேன் இன்னுமதனைச் செய்யாமல், உன்னுடைய இரு திருவடிகளை வணங்கக் கட்டளையிட்டு அடிமை கொண்டருள்வாயாக!

**மாசற்ற வுள்ளூர் வெளித்தெருவி லேபொங்கி**
**வழியுஞா னாமுதத்தை**
**மாயைக் கடற்குளமி ழாதவ ரெடுத்துண்ணு**
**மதுரஞா னாமுதத்தை**
**ஆசைக் கசப்பினை யடித்துத் துரத்திடு**
**மதீதஞா னாமுதத்தை**
**அன்பர்க ளகப்புலங் கங்குகரை யில்லா**
**தலம்புஞா னாமுதத்தை**
**மாசொட்டு மரணசன னங்களை யறக்களைய**
**வல்லஞா னாமுதத்தை**
**மனமகிழ்ந் தேயெனக் கூட்டியூட் டிப்பொலா**
**மலவிரு ளெலாமிரித்துத்**
**தேசுற்ற செம்பொற் பதங்கொடுத் தாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 17.**

*மாசற்ற உள்ளூர் வெளித் தெருவிலே பொங்கி*
*வழியும் ஞான அமுதத்தை*
*மாயைக் கடற்குள் அமிழாதவர் எடுத்து உண்ணும்*
*மதுர ஞான அமுதத்தை*
*ஆசைக் கசப்பினை அடித்துத் துரத்திடும்*
*அதீத ஞானஅ முதத்தை*
*அன்பர்கள் அகப்புலம் கங்குகரை இல்லாது*
*அலம்பு ஞான அமுதத்தை*
*மாசு ஒட்டு மரண சனனங்களை அறக் களைய*
*வல்ல ஞானஅ முதத்தை*

*மனம் மகிழ்ந்தே எனக் கூட்டி ஊட்டிப் பொலா*
*மல இருள் எலாம் இரித்துத்*
*தேசு உற்ற செம்பொன் பதம் கொடுத்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 17.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! குற்றமற்ற இதயமெனும் ஊரில் உள்ள வெளியாகிய தெருவில் பொங்கி வழியும் ஞான அமுதத்தை, மாயை ஆகிய கடலுக்குள் அமிழாதவர் எடுத்து உண்ணும் இனிய ஞான அமுதத்தை, ஆசை ஆகிய கசப்பினை அடித்துத் துரத்திடும் மேலான ஞான அமுதத்தை, அன்பர்களின் மனத்தில் எல்லையின்றித் ததும்பும் ஞான அமுதத்தை, குற்றம் சேரும் இறப்புப் பிறப்புக்களை முற்றும் நீக்கும் வல்லமையுள்ள ஞான அமுதத்தை, மனம் மகிழ்வுற்று எனக்கு ஊட்டி ஊட்டிப் பொல்லாத ஆணவமல இருளை ஒழித்துச் சோதியான உன் செம்பொன் போலும் திருவடிகளைக் கொடுத்து என்னை அடிமை கொண்டருள்வாயாக!

**இவ்வள வெனச்சொலற் கமையா தெனாமறை**
**யியம்புஞ் சுகோதயத்தை**
**என்றைக்கு வருமோ வெனாவப்பி யாசிகளு**
**ளெண்ணுஞ் சுகோதயத்தைக்**
**கவ்வையொடு தெவ்வமு மிலாதபதி நிட்டையிற்**
**காணொரு சுகோதயத்தைக்**
**கறையற்ற வருவமன நற்சீவன் முத்தருட்**
**கனியுஞ் சுகோதயத்தை**
**ஒவ்வருவ மனமுமில் பரமுத்த ரிடையறா**
**துறையுஞ் சுகோதயத்தை**
**உன்னருளின் வலிகொண்டு பெறவென்று கருதினே**
**னுள்ளுவந் தருளிநாளுஞ்**
**செவ்விய திருக்கழற் காளாக வாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 18.**

*இவ்வளவு எனச் சொலற்கு அமையாது எனா மறை*
*இயம்பும் சுக உதயத்தை*
*என்றைக்கு வருமோ எனா அப்பியாசிகள் உள்*
*எண்ணும் சுக உதயத்தை*

*கவ்வையோடு தெவ்வமும் இலாத பதி நிட்டையில்*
*காண் ஒரு சுக உதயத்தைக்*
*கறை அற்ற அருவ மன நற்சீவன் முத்தருட்*
*கனியும் சுக உதயத்தை*
*ஒவ்வு அருவ மனமும் இல் பரமுத்தர் இடை அறாது*
*உறையும் சுக உதயத்தை*
*உன் அருளின் வலிகொண்டு பெற என்று கருதினேன்*
*உள் உவந்து அருளி நாளும்*
*செவ்விய திருக்கழற்கு ஆள் ஆக ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 18.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! இவ்வளவு என்று சொல்லுதற்கு அடங்காதது என வேதங்கள் கூறும் சுகோதயத்தை (இன்பத் தோற்றம்), என்றைக்கு வருமோ என்று சாதகர்கள் மனத்தில் கருதும் சுகோதயத்தை, துன்பமும் பகையும் இல்லாத பதிநிட்டையில் காணப்படும் சுகோதயத்தை, குற்றமற்ற அருவ மனம் (அருள் மனம்) உள்ள நல்ல சீவன் முத்தரின் உள்ளத்தில் பழுக்கும் சுகோதயத்தை, பொருந்தும் அருவ மனமும் இல்லாத பரமுத்தரிடை இடையறாது இருக்கும் சுகோதயத்தை, உன் அருளின் வலிமை கொண்டு பெறலாம் என்று கருதினேன்; திருவுளம் மகிழ்ந்து அருளி, நாள்தோறும் தெளிவான உன் திருவடிக்கு அடிமை கொண்டருள்வாயாக!

**அட்டாங்க நிட்டையிலு மெட்டாத வத்துவெனு**
**மத்துவித சின்மயத்தை**
**ஆனந்த மேயியல்ப தாயகண் டாகார**
**மானசிவ சின்மயத்தைத்**
**தட்டாத சுத்தவெளி தன்னினிறை வானசிவ**
**சாயுச்சிய சின்மயத்தைக்**
**தானென்ப தின்றியது தானென் றுணர்ந்தவுயிர்**
**சார்பரம சின்மயத்தைத்**
**கிட்டாத மட்டியைக் கிட்டவர வொட்டாத**
**கேடற்ற சின்மயத்தைக்**
**கிருபையண வாவறிய னேனறிய வென்றுனது**
**கிருபையை யவாவுகின்றேன்**
**சிட்டனிவ னெனவந்தவ் வாறுசெய் தாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**

**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 19.**

*அட்டாங்க நிட்டையிலும் எட்டாத வத்து எனும்*
*அத்துவித சின்மயத்தை*
*ஆனந்தமே இயல்பதாய் அகண்டாகார*
*மானசிவ சின்மயத்தைத்*
*தட்டாத சத்தவெளி தன்னில் நிறைவான சிவ*
*சாயுச்சிய சின்மயத்தைத்*
*தான் என்பது இன்றி அதுதான் என்று உணர்ந்த உயிர்*
*சார் பரம சின்மயத்தைக்*
*கிட்டாத மட்டியைக் கிட்டவர வொட்டாத*
*கேடு அற்ற சின்மயத்தைக்*
*கிருபை அணவா வறியனேன் அறிய என்று உனது*
*கிருபையை அவாவுகின்றேன்*
*சிட்டன் இவன் என வந்து அவ்வாறு செய்து ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 19.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! அட்டாங்க யோக முறையில் கூறப்படும் நிட்டையிலும் எட்டாத பொருள் என்னும் அத்துவித சின்மயத்தை, ஆனந்தமே இயல்பான தன்மையாக உள்ள எல்லையற்ற ஆகாசமாயுள்ள சிவ சின்மயத்தை, தடையில்லாத தூய வெளியில் நிறைவாக உள்ள சிவசாயுச்சிய சின்மயத்தை, தான் என்று அல்லாமல் அப்பொருள் வேறு தனியாக உள்ள உயிர் என்று உணர்ந்த உயிர் சாரும் பரம சின்மயத்தை, இறைவனை நெருங்காத மதி கேடனைத் தன அருகில் வரவொட்டாத கேடில்லாத சினமயத்தை, கருணையே பொருந்தாத வறியனாகிய நான் உன்னை அறியவென்று உனது கருணையை விரும்புகின்றேன்; இவன் நமது சீடன் எனக் கருதி வந்து அவ்வாறு செய்து அடிமை கொண்டருள்வாயாக!

**இறப்புறு பிறப்பின்றி யென்றுமொரு நீர்கொண்ட**
**வேகபரி பூரணத்தை**
**எத்துணை விகாரமு மிலாவமல வறிவா**
**யிலங்குபரி பூரணத்தை**
**அறப்பொரு ளருட்பொருள் விரும்புவா ருள்ளுணர்ந்**
**தருள்செய்பரி பூரணத்தை**
**அறிஞர்தங் கண்ணே யறிந்தத்து விதமென்**

**றடைந்தபரி பூரணத்தைக்**
**குறிப்பினு மதிப்பினு மடங்காத வொருதன்மை**
**கொண்டபரி பூரணத்தைக்**
**கோதில்வே தாந்தசித் தாந்தசம ரசநிபுணர்**
**கூறுபரி பூரணத்தைச்**
**சிறப்புட னளாவிநான் வாழநீ யாளரோ**
**தித்திக்கு முத்திமுதலே**
**தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்**
**சிவசுப்பிர மணியதேவே. 20.**

*இறப்பு உறு பிறப்பு இன்றி என்றும் ஒரு நீர் கொண்ட*
*ஏக பரிபூரணத்தை*
*எத்துனை விகாரமும் இலா அமல அறிவாய்*
*இலங்கு பரிபூரணத்தை*
*அறப் பொருள் அருட்பொருள் விரும்புவார் உள் உணர்ந்து*
*அருள்செய் பரிபூரணத்தை*
*அறிஞர் தம் கண்ணே அறிந்து அத்துவிதம் என்று*
*அடைந்த பரிபூரணத்தை*
*குறிப்பினும் மதிப்பினும் அடங்காத ஒரு தன்மை*
*கொண்ட பரிபூரணத்தை*
*கோது இல் வேதாந்த சித்தாந்த சமரச நிபுணர்*
*கூறு பரிபூரணத்தைச்*
*சிறப்புடன் அலாவி நான் வாழ நீ ஆள் அரோ*
*தித்திக்கும் முத்தி முதலே*
*தெள் அறிவு எனும் சலதி பொங்கும் உள் ஊரில் வளர்*
*சிவ சுப்பிரமணிய தேவே. 20.*

இனிக்கும் முத்திக்குத் தலைவனே! தெளிந்த அறிவுக் கடல் பொங்கும் இதயம் எனும் அறிவிருக்குந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவசுப்பிரமணியக் கடவுளே! இறப்பை உண்டாக்கும் பிறப்பு இல்லாது என்றும் ஒரு தன்மை கொண்ட ஒன்றான பரிபூரணத்தை, எவ்வளவு வேற்றுமையும் இல்லாத குற்றமற்ற அறிவாய் விளங்கும் பரிபூரணத்தை, அறமும் அருளுமாக உள்ள பொருளை விரும்புவார் மனத்தை உணர்ந்து அருள்புரியும் பரிபூரணத்தை, அறிஞர்தம் ஞானக் கண்ணால் அறிந்து அது அத்துவிதப் பொருள் என்று அடைந்த பரிபூரணத்தை, சுட்டி அறிதலினாலும் இன்ன தன்மையதென்று அளந்து கூறுவதினாலும் அடங்காத ஒரு தன்மை கொண்ட பரிபூரணத்தை, குற்றமில்லாத வேதாந்த சித்தாந்த சமரசம் கூறும் நிபுணர் கூறும் பரிபூரணத்தை, சிறப்புடன் இரண்டறக் கலந்து நான் வாழும்படி நீ அடிமை கொண்டருள்வாயாக!